




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 02 | ISSUE: 73 | 08.09.2026 | TUESDAY | AAVANI : 22 | PRICE : RS.5/-

மலர் : 02 | இதழ் : 73 | 08.09.2026 | செவ்வாய்கிழமை | ஆவணி : 22 | விலை : ரூ.5/–


## திமுக செய்த ஊழல்கள் இதுதான்.!

# "ஆவேசமாக பேசிய முதல்வர் விஜய்"

### "அன்று ஓட்டப்பந்தயம்... இன்று ஒப்புவித்தல் போட்டி" - உதயநிதி விமர்சனம்



சென்னை: செப்.8–

"சட்டம் - ஒழுங்கு குறித்து நாங்கள் கேட்ட எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் வெறும் பஞ்ச் டயலாக் மட்டுமே பேசி டைவர்சன் செய்திருக்கிறார் முதல்வர் விஜய்" என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "அதே ஆக்டிங், பஞ்ச் டயலாக் பேச்சுக்கள்; ரீல்ஸுக்காக மட்டுமே முதல்வர் விஜய் பேசிவிட்டு சென்றுள்ளார். யாரோ எழுதிக் கொடுத்ததை மனப்பாடம் செய்துவிட்டு வந்து வாந்தி எடுத்துள்ளார் . சட்டம் - ஒழுங்கு குறித்து நாங்கள் கேட்ட எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் வெறும் பஞ்ச் டயலாக் மட்டுமே பேசி டைவர்சன் செய்திருக்கிறார்.

தமிழகத்தில் ஊழல் செய்து தண்டிக்கப்பட்ட முதல்வர் யார் என உங்களுக்கு தெரியும். எங்கள் மீதான அமலாக்கத்துறை உட்பட அனைத்து வழக்குகளையும் சட்டப்படி சந்திக்கத் தயார். இரு நாட்களுக்கு முன்பு கே.என்.நேரு வீட்டில் சோதனை நடத்தி ஒன்றும் இல்லை என பேட்டி கொடுத்துள்ளனர். கோடநாட்டில் போய், தன்னுடைய பட ரிலீஸுக்காக வாட்ச் மேன் வேலை பார்த்தவர் தான் நம்முடைய முதல்வர்.

அமலாக்கத் துறை கூறியதாக பேசியதெல்லாம் வெறும் குற்றச்சாட்டுகள்தான்; எதுவும் நிரூபிக்கப்படவில்லை. பேரவையில் திமுக மீது பல பொய்யான குற்றச்சாட்டுகளை தொடர்ந்து வைத்தார் முதல்வர் விஜய். அதற்கு விளக்கம் அளிக்க சபாநாயகர் அனுமதி மறுத்ததால் வெளிநடப்பு செய்தோம்.

தவெக அரசுக்கும் முதல்வர் விஜய்யின் பேச்சுக்கும் முழுக்க முழுக்க ஜால்ரா அடித்துள்ளார் பேரவைத் தலைவர்; முதல்வர் பேசி முடித்ததும் வாய்ப்பு தருவதாக சொன்ன பேரவைத் தலைவர் ஏதோ துண்டு சீட்டை பார்த்ததும் வாய்ப்பு தர மறுத்துவிட்டார்.

15 கோடி ரூபாய் வருமானத்தை மறைத்ததாக முதல்வர் மீது கூட வருமான வரி வழக்கு செய்திருக்கிறது. நீங்கள் ஆட்சிக்கு வந்ததை நம்புங்கள், எங்கள் மீது பழி போடாமல் பேச வேண்டும் எனக் கூறினேன். திமுக ஆட்சி நடக்கிறது என்ற நினைப்பில் பொய்யான குற்றச்சாட்டுகளை முதல்வர் கூறுகிறார்.

திங்களன்று பதில் சொல்கிறேன் எனக் கூறி ஓட்டப் பந்தயத்தில் ஓடியது போல ஓடினார். இன்று மனப்பாடம் செய்து ஒப்புவித்தல் போட்டி போல பேரவையில் தவறான, பொய்யான குற்றச்சாட்டுகளை ஒப்பித்துள்ளார்.

விஷ்ணு ரெட்டி, அவரின் மச்சான் சுஜய் ரெட்டி, அவரின் நண்பர் அணில் ரெட்டி இவர்கள் அனைவரும் என்ன பொறுப்பில் இருக்கிறார்கள். ஏன் மைமன்ஸ் பொறுப்பை அவர்களிடம் கொடுத்துள்ளீர்கள். அதற்கான ஆதாரங்களை நாங்கள் வெளியிடுவோம். மிசாவைப் பற்றி பேச முதல்வருக்கு என்ன அருகதை இருக்கிறது. இவர் அரசியலுக்கு வந்ததே ஒரு விபத்து" என்று காட்டமாக பதிலடி கொடுத்தார்.



சென்னை, செப்.8–

காவல்துறை மானியக் கோரிக்கை விவாதம் நிறைவடைந்த நிலையில், முதல்–அமைச்சர் விஜய் பதிலளித்து பேசியதாவது; தமிழ்நாட்டில் அண்மைக்காலமாக ஆபாச நதியாக, வன்ம நதியாக ஓடுகிறது. அரசியல் ரீதியாக கருத்துகளை பதிவுசெய்யலாம். பெண்களுக்கு எதிரான கருத்துகளை அனுமதிக்க மாட்டோம். அவதூறாக, அசிங்கமாக, ஆபாசமாக பேசும் அரசியல் நமக்கு எதற்கு? பெண்களை பற்றி அவதூறாக பேசினால் சட்டம் தன் கடமையை செய்யும். இங்குள்ள ஒரு உறுப்பினர், எலும்பை உடைப்பேன் என்று பேசுகிறார். அவர் என்ன ஆர்த்தோ டாக்டரா? திமுகவுக்கு ஓட்டு போடாதவர்களுக்கு நல்ல சாவு வராது என ஒருவர் பேசுகிறார். இப்படி பேசியதால் தான், இவர்கள் எதிர்கட்சியில் அமர்ந்திருக்கிறார். மக்கள் தீர்ப்பை கொஞ்சமாவது மதிக்க வேண்டும். மிசாவை பார்த்தவர்கள், மிசாவை பார்த்தவர்கள் என்று சொல்கிறார்கள். மிசாவை பற்றிய வரலாறு எனக்கும் தெரியும்.

ஒரு சாம்பிள் பார்க்கலாமா?

"என் மேஜையில் இருக்கும் 3 பைல்களை ஓப்பன் செய்யுமாறு திமுகவினர் கூறினர். அதில் ஒரு சாம்பிளை பார்க்கலாமா? கடந்த ஆட்சியில் அமலாக்கத்துறை அனுப்பிய விபரங்களை படிக்கிறேன். விசாரணை கமிஷனின் அறிக்கையில் நிறைய கூத்துக்கள் வெளியாகியுள்ளது. அதில் உள்ள தகவல்களை மக்களுக்கு சொல்ல வேண்டும். முழுசா படிக்க 2 நாள் ஆகும். அதனால் சுருக்கமாக கூறுகிறேன்.

சர்க்காரியா கமிஷன் –1977

சர்க்காரியா கமிஷன் –1977: திமுக ஆட்சியில் வீராணம் குழாய் திட்டத்துக்கு டெண்டர் வேண்டுமென்றால் இரண்டரை சதவீத கமிஷன் வேண்டும் என மாறன் கேட்டாராம். அதவது 40 லட்ச ரூபாய் கமிஷனாம். 1770–1974 வரை மொத்தம் 25 லட்சம் லஞ்சம் கொடுக்கப்பட்டதாக அதில் சொல்லப்பட்டுள்ளது. தவணையாக லஞ்சம் வாங்கியுள்ளனர். முரசொலி கட்டிடத்துக்கு, மேலும் பல விஷயத்துக்காகவும் கமிஷன் வாங்கியுள்ளனர். இதெல்லாம் அமலாக்கத்துறையின் குற்றச்சாட்டு. சத்யநாராயணா பிரதர்ஸ்க்கு டெண்டர் கொடுப்பதற்காக கருணாநிதி தனது முதல்–அமைச்சர் பதவியை தவறாக பயன்படுத்தியுள்ளார். இதெல்லாம் சொன்னால் ஓடிவிடுவார்கள். ஆதாரங்கள் கேட்டால் இங்குள்ள நூலகத்தில் உள்ளது. அங்கு போய் பாருங்கள். ஆதாரத்தை பக்கத்துலேயே வைத்துக்கொண்டு பிறரிடத்தில் தேடுகின்றனர். ஆதாரம் பக்கத்திலேயே உள்ளது.

கட்சி நிதி கட்சி நிதி குறித்த திமுகவின் ஊழல் குறித்து அமலாக்கத்துறை 100 பக்கத்திற்கு அனுப்பியுள்ளது. அதாவது, 7.5 சதவீதத்தில் இருந்து 10 சதவீதம் வரை கட்சி நிதி வாங்கியுள்ளதாக அமலாக்கத்துறை கூறியுள்ளது. அதன் ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. அந்த துறைக்கு அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜி தனது அதிகாரத்தை தவறாகபயன்படுத்தியுள்ளார். எவ்வளவு பெரிய சாதனை. அதுதான் திமுக. டாஸ்மாக்கை கையில் வைத்திருந்த அமைச்சருடன் ஐஏஎஸ் அதிகாரிகளும் இதில் சிக்கியுள்ளனர். செந்தில் பாலாஜியின் சகோதரர் குறித்தும் அமலாக்கத்துறை சொல்லியுள்ளது. பார்ட்டி பண்ட் வாங்கியதில் முக்கிய நபர்கள் மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் என அமலாக்கத்துறை கூறியுள்ளது. இரண்டு துறைகளின் பைல்ஸ்களை திறந்தாலே இந்த நிலைமை என்றால், இன்னும் சில பைல்ஸ்களை திறந்தால் எத்தனை பூதங்கள் வெளிவருமோ?

தவறு இருக்குமிடத்தில் திமுக திமுக இருக்குமிடத்தில் தவறுகள் இருக்காது என அவர்கள் கூறுகின்றனர். நான் கூறுகிறேன். திமுக இருக்குமிடத்தில் தவறுகள் இருக்கும். தவறுகள் இருக்குமிடத்தில் திமுக இருக்கும். ஆதாரம் வேண்டும் என்றீர்களே.. போதுமா.. 2 வகை உள்ளது. தவறு செய்து மாட்டிக்கொள்பவர்கள் ஒரு பக்கம். தவறு செய்து, செய்யாதபடி சரியாக செய்பவர்கள் இன்னொரு பக்கம். அதில் திமுக 2 வது பக்கம். ஊழல் என்று சொன்னாலே திமுகவினர் எழுந்து நிற்பார்கள். ஊழல் செய்யவில்லை என்று அவர்களால் கூற முடியுமா? கடந்த திமுக ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சீரழிவு, போதைப்பொருள் பயன்பாடு இருந்தன. சட்டம், ஒழுங்கு பற்றி பேசுவதற்கு முன் உங்கள் ஆட்சியில் நடந்ததை கண்ணாடியில் பார்ப்பது நல்லது. 1967ல்அண்ணா, 1977ல் எம்ஜிஆர், 1983ல் என்டிஆர், 2026ல் விஜய். இயற்கையும் இறைவனும் நம்ம பக்கம் தான் இருப்பார்கள். அன்புக்கு முன்னாடி அவர்கள் தோற்பது உறுதி உறுதி உறுதி. நாற்காலிக்காக அதிகாரத்திற்காக நான் இங்கு வரவில்லை, மக்களுக்கு நல்லது செய்யவும், நன்றி கடன் செய்யவும் மட்டுமே வந்துள்ளேன்." இவ்வாறு திமுகவின் ஊழல் குறித்து அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முதல்–அமைச்சர் விஜய் முன்வைத்தார்.

# சிறுவாச்சூர் மதுரகாளியம்மன் கோவில் அன்னதானத் திட்டத்தில் ஊழல்!..

## கண்டும் காணாத இணை ஆணையர் கார்த்திகேயன்....

பெரம்பலூர், செப்.08

தமிழக அளவில் மிகவும் பிரசித்தி பெற்ற சக்தி வாய்ந்த ஸ்தலம்தான் சிறுவாச்சூர் மதுரகாளியம்மன் கோவில். பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் அருகே தேசிய நெடுஞ்சாலையின் மேல்புறம் அமைந்துள்ள இக்கோவிலானது, வார நாட்களில் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமையும், மாதாந்திர அமாவாசை, பௌர்ணமி நாட்களில் என மாதத்திற்கு 10 நாட்கள் மட்டுமே கோவில் திறப்பது வழக்கம். இதுபோன்று வேறு எங்கும் இல்லாத அளவிற்கு சக்தி வாய்ந்த ஸ்தலமாக இது அமைந்துள்ளது.

வார நாட்களான திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை கோவில் திறப்பின் போது, அதிகாலை முதல் இரவு கோவில் நடை சாத்தும் வரை பக்தர்கள் அலை மோதுவது வழக்கம். ஆனால் அமாவாசை பௌர்ணமி நாட்களில் எப்போதும் இல்லாத அளவிற்கு கட்டுக்கடங்காத பக்தர்கள் கூட்டம் அலைமோதும். தமிழகத்தின் பல மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து தரிசனம் பெற்றுச் செல்வது வழக்கமாக உள்ளது.



தென் தமிழக
கூடுதல் ஆணையர்
பொன்மணி ஐஏஎஸ்

இக்கோவிலில் உள்ள மதுரகாளியம்மன் அந்த அளவிற்கு சக்தி உள்ள காளியாக பிரசித்தி பெற்று விளங்கி வருகிறது.

இக்கோவிலில் அன்னதானத் திட்டத்தில் தினசரி 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. கோவில் திறக்கும் நாட்களில் 200 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தான் தொடர்ந்து ஊழல் நடைபெற்று வருவதாக இதுவரை புகார் அனுப்பியும், கடந்த ஆட்சியில் எவரும் கண்டு கொள்ளவில்லை என தெரிவிக்கின்றனர்.

இங்கு தட்டச்சராக பணிபுரியும் வெங்கடேசன் என்பவர் அன்னதானத் திட்டத்தின் கணக்காளராகவும் இருந்து வருகிறார். இங்கு அலுவலக உதவியாளராக பணிபுரியும் உமாராணி என்பவர் அன்னதானத் திட்ட பொருட்களின் வைப்பறை பொறுப்பாளராக உள்ளார். இவர்தான் தினசரி பொருட்களை அளவிட்டு சமையலுக்கு அனுப்புவது வழக்கமாக இருந்து வருகிறது. தினமும் 100 நபர்களுக்கான அன்னதானத்திற்கு 16 கிலோ அரிசி கொடுக்க வேண்டுமாம். ஆனால் இவரோ 11 கிலோ அரிசியினை, தன் கையகப்படுத்திக் கொண்டு 25 கிலோ அரிசி மட்டும் தான் சமைப்பதற்கு கொடுப்பதாக கூறுகிறார்கள். இதற்கு முழு உடந்தையாக இருப்பது தட்டச்சரும், அன்னதானத் திட்டத்தின் கணக்காளருமான வெங்கடேசன்தானாம். வெங்கடேசன் மற்றும் உமாராணியும் சேர்ந்து அன்னதான பொருட்களை களவாடுவதில் குறியாக இருந்து வருகிறார்கள்.



செயல் அலுவலர்
அசனாம்பிகை

சாதாரண நாட்களிலேயே இப்படி என்றால், கோவில் திறக்கப்படும் நாட்களில், 200 நபர்களுக்கு வழங்க வேண்டிய அன்னதானத்திற்கு, கிட்டத்தட்ட 10 கிலோ வரைக்கும் அபேஸ் செய்து விடுகிறார்களாம். இது இப்படி என்றால் அவர்கள் கொடுக்கும் அரிசியில் சமையலர் மணி என்பவர், அதிலும் கிட்டத்தட்ட 5 கிலோ அரிசியை களவாடிவிடுகிறாராம். இந்த விஷயம் கோவிலில் பணிபுரியும் செயல் அலுவலர் அசனாம்பிகை முதற்கொண்டு அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான் என்று கூறுகிறார்கள்.

செயல் அலுவலர் அசனாம்பிகையிடம் நேரடியாக பலமுறை புகார் கூறி இருப்பதாக கூறுகிறார்கள். கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் இங்கு முதல் நிலை செயல் அலுவலராக பணிபுரிந்து வரும் அசனாம்பிகை, இந்த அன்னதானத் திட்ட ஊழல் சம்பந்தமாக இதுவரை பெயரளவில் கூட விசாரணையோ அல்லது மேல் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க கூறியதோ கிடையாது என விவரம் அறிந்தவர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

தற்போது புதியதாக உருவாக்கப்பட்ட பெரம்பலூர் இணை ஆணையர் பணியிடத்தில், எளிமைக்கு பெயர் போன இணை ஆணையர் கார்த்திகேயன் பணிபுரிந்து வருகிறார். பலமுறை இக்கோவிலுக்கு வந்துள்ள இணை ஆணையர் கார்த்திகேயன், இது சம்பந்தமாக எதுவும் விசாரிக்கவில்லை என்கிறார்கள். இதற்கு மேலாவது நடவடிக்கை எடுப்பாரா? இல்லை கண்டும் காணாமல் விட்டு விடுவாரா? என விவரம் அறிந்த உள்ளூர் பக்த கோடிகள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

இந்து சமய அறநிலையத்துறை துறையின் தென்மண்டல கூடுதல் ஆணையர் பொன்மணி ஐஏஎஸ் சாட்டையை சுழற்றினால் மட்டுமே இது போன்ற ஊழல்களை கட்டுப்படுத்த முடியும்.

# முதல்வரின் பதிலுரைக்கு எதிர்வினையாற்ற அனுமதி மறுப்பு: திமுக வெளிநடப்பு



சென்னை, செப்.,8-
முதல்வர் விஜய்யின் உரைக்கு பதில் அளிக்க சபாநாயகர் ஜே.சி. டி. பிரபாகர் அனுமதி மறுத்ததால், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுகவினர் வெளிநடப்பு செய்தனர்.

இன்று காலை சட்டப்பேரவை கூடியதும், அரசினர் சட்ட முன்வடிவுகள் அறிமுகம் செய்யப்பட்டன. அமைச்சர்கள் செங்கோட்டையன், ஆனந்த் உள்ளிட்டோர் தங்கள் அமைச்சரவை சார்ந்த சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்தனர். 2026-ம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் திருத்த சட்டத் முன்வடிவு, 2026ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு உள்ளிட்டவை அறிமுகப்படுத்தப்பட்டு குரல் வாக்கெடுப்பின் மூலம் அவை நிறைவேற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து முதல்வர் விஜய்யின் பதிலுரை இருந்தது. முதல்வர் விஜய் பேசும்போது, திமுகவின் கடந்த கால ஆட்சியின்போது சர்க்காரியா ஊழல் தொடர்பான ஆவணங்களை வாசித்தார்.

வீராணம் குடிநீர் திட்டத்தை சத்யநாராயணா பிரதர்ஸ் நிறுவனத்துக்கு வழங்க அப்போதைய முதல்வர் கருணாநிதியின் மருமகன் முரசொலி மாறன் 2.5% கமிஷன் கேட்டதாக ஆவணத்தில் இருப்பதாக அவர் வாசித்தார்.

மேலும், கடந்த திமுக ஆட்சியின்போது 7.5% - 10% வரை கட்சி நிதியாக கமிஷன் வாங்கியதற்கான ஆதரத்தை அமலாக்கத்துறையே வழங்கியுள்ளதாக முதல்வர் விஜய் தெரிவித்தார். மேலும், இந்த கட்சி நிதி மூலமாக நேரடியாக பலன் பெற்றவர்கள் முதல்வர்கள் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி உள்ளிட்டோர் என்பதை அமலாக்கத்துறை ஆவணம் தெரிவித்துள்ளதாகவும் விஜய் குறிப்பிட்டார்.

முதல்வரின் இந்த பேச்சுக்கு திமுக உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் தொடர்ந்து எழுந்து நின்ற வண்ணம் இருந்தனர்.

எனினும், முதல்வர் தொடர்ந்து தனது உரையை தொடர்ந்தார். திமுகவினரால் தமிழகத்தில் ஆபாச நதி, வன்ம நதி ஆறாக ஓடிக்கொண்டிருப்பதாகவும், இதை அவர்கள் நியாயப்படுத்துவதாகவும் முதல்வர் குற்றம் சாட்டினார்.

அந்த காலத்து அரசியலில் இருந்த நல்லதை மட்டுமே எடுத்துக்கொள்வோம் என்றும், ஆபாசமான, அவதூறான, துருப்பிடிச்ச அரசியல் நமக்கு எதற்கு என்றும் முதல்வர் கேள்வி எழுப்பினார்.

மேலும், "பேசிப் பழகிய பொய், வாங்கி பழகிய கை, போட்டுப் பழகிய பை" என்று கண்ணதாசன் கூறி இருக்கிறார். இதுதான் திமுக; இவ்வளவுதான் திமுக என்றும் முதல்வர் தெரிவித்தார்.

திமுகவினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், அவர்கள் மீது அவை விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவை முன்னவர் செங்கோட்டையன் வேண்டுகோள் விடுத்தார்.

இதையடுத்துப் பேசிய சபாநாயகர் ஜே.சி. டி. பிரபாகர், முதல்வர் பேசுவதை தடுக்க வேண்டும் என்ற நோக்கோடு நீங்கள் நடந்து கொள்கிறீர்கள்; இதை அனுமதிக்க முடியாது என்றார்.

அப்போது, திமுக உறுப்பினர்கள் சபாநாயகர் இருக்கை முன்பாக அமர்ந்து அமளியில் ஈடுபட்டனர். முதல்வரின் உரைக்கு பதில் அளிக்க எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

முதல்வரின் பேச்சை முடக்க வேண்டும் என்ற நோக்கோடு நீங்கள் செயல்பட்டதால் உங்களுக்கு வாய்ப்பு அளிக்க முடியாது என சபாநாயகர் தெரிவித்தார்.

பின்னர் பேசிய முதல்வர் விஜய், அனுமதி கொடுங்கள் என கேட்டுக்கொண்டார். இதையடுத்து, அனுமதி கொடுப்பதாக சபாநாயகர் கூறினார்.

எனினும், அவர் பேசிய சில கருத்துக்களுக்கு திமுகவினர் எதிர்ப்பு தெரிவித்ததால், அனுமதி கொடுக்க முடியாது என சபாநாயகர் திட்டவட்டமாகக் கூறினார்.

சபாநாயகரின் இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுகவினர் வெளிநடப்பு செய்தனர்.

# 'செத்து விழும் காகங்கள்' - காரணத்தை ஆராயும் கால்நடைத்துறை!

திருநெல்வேலி, செப்.8-
பாளையங்கோட்டை அருகே உள்ள பர்கிட் மாநகர் பகுதியில் கடந்த சில தினங்களாக காக்கைகள் ஆங்காங்கே உயிரிழந்து கிடப்பதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சில காக்கைகள் மயக்க நிலையில் காணப்படுவதாகவும், தொடர்ந்து சில காக்கைகள் உயிரிழந்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இதனால் அப்பகுதி பொதுமக்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து வனத்துறையினர் மற்றும் கால்நடைத் துறையினர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். உயிரிழந்த மற்றும் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட காக்கைகள் குறித்து அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்த காக்கைகளின் இறப்புக்கான காரணத்தை கண்டறியும் வகையில், அவற்றின் உடல்கள் உடற்கூறு பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக கால்நடைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவி வரும் கடுமையான வெயிலின் தாக்கம் காரணமாக காக்கைகள் உயிரிழந்துள்ளனவா அல்லது ஏதேனும் நோய் தாக்கம் காரணமா என்பது உடற்கூறாய்வு பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னரே உறுதியாக தெரியவரும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எல் நினோ மற்றும் காலநிலை மாற்றங்கள் காரணமாக தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் கடுமையான வெயில் சுட்டெரித்து வருகிறது. இதன் தீவிரம் வரும் காலங்களில் தொடர்ந்து அதிகரிக்கும் எனவும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

அந்தவகையில், திருநெல்வேலி மாவட்டத்தில் வரலாற்றில் இல்லாத வகையில் செப்டம்பர் மாதம் அதிகபட்சம் 105 டிகிரி பாரன்ஹீட் வரை வெயில் பதிவாகி வருகிறது. எனவே, கடந்த சில வாரங்களாக வெப்ப அலை வீசுவதால் பொதுமக்கள் வெளியே செல்லவே அச்சப்படும் சூழல் நிலை வருகிறது பிற்பகல் நேரங்களில் கடும் வெயில் மக்களை சுட்டெரிக்கிறது.

இது போன்ற சூழலில் வெயிலின் தாக்கத்தால் இந்த காக்கைகள் இறந்திருக்க வாய்ப்பு இருப்பதாக சிலர் கூறுகின்றனர். எனினும், அதன் இறப்புக்கான அறிவியல் காரணங்களை ஆய்வு செய்த பிறகு உண்மை நிலவரம் தெரியவரும். இதுதொடர்பான பணியில் கால்நடைத்துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தற்போது, ராமையன்பட்டி அருகே உள்ள மாவட்ட கால்நடை மருத்துவமனைக்கு உயிரிழந்த காக்கைகள் உடல் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது போன்று தமிழ்நாட்டின் வேறு ஏதேனும் பகுதிகளில், காக்கைகள் உயிரிழப்பு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும் கால்நடை துறை விசாரித்து வருகிறது.

# எம்.எல்.ஏ.க்களுக்கான படிகள் உயர்வு: ஆண்டுக்கு ரூ.43.28 கோடி கூடுதல் செலவு



சென்னை, செப்.8-
தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கான வாகனப்படியை மாதம் ரூ.25 ஆயிரத்தில் இருந்து ரூ.75 ஆயிரமாக உயர்த்துவது மற்றும் தனிப்பட்ட உதவியாளருக்காக மாதம் ரூ.25 ஆயிரம் படி வழங்குவது உள்ளிட்ட அறிவிப்புகளை செயல்படுத்துவதால், தமிழக அரசுக்கு ஆண்டுக்கு ரூ.43.28 கோடி கூடுதல் செலவு ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக சட்டப்பேரவையில் கடந்த ஆகஸ்ட் 19-ம் தேதி முதலமைச்சர் வெளியிட்ட அறிவிப்பில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளில் பொதுமக்களுக்கான பணிகளை திறம்பட மேற்கொள்ளவும், அவர்களது பணிகளை எளிதாக்கவும் ஒவ்வொரு எம்.எல்.ஏ.வுக்கும் வாகனம் வழங்கப்படும் என அறிவித்தார்.

அத்துடன், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் ரூ.25 ஆயிரம் வாகனப்படி, ரூ.75 ஆயிரமாக உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் ஒவ்வொரு எம்.எல்.ஏ.வுக்கும் வாகனப்படியாக மாதம் கூடுதலாக ரூ.50 ஆயிரம் கிடைக்கும்.

மேலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட உதவியாளர் படியாக மாதந்தோறும் ரூ.25 ஆயிரம் புதிதாக வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்காக, தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கும் சட்டம், 1951-ல் உரிய திருத்தம் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான மசோதாவில் இந்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

மசோதாவுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக் குறிப்பின்படி, இந்த புதிய நடைமுறைகள் அமலுக்கு வந்ததும் மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து ஆண்டுதோறும் ரூ.43 கோடியே 28 லட்சத்து 30 ஆயிரத்து 385 கூடுதல் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி, எம்.எல்.ஏ.க்களுக்கான வாகனப்படி உயர்வு மற்றும் தனிப்பட்ட உதவியாளர் படி உள்ளிட்ட அறிவிப்புகளை செயல்படுத்துவதால் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.43.28 கோடி கூடுதல் நிதிச்சுமை ஏற்பட உள்ளது.

# பெண்களை கொச்சையாகப் பேசும் தவெகவினரையும் விஜய் கண்டிக்க வேண்டும்" - பிரேமலதா

சென்னை, செப்.8-
"பெண்களைப் பற்றி மிக மிக கொச்சையாக பதிவு போடும் தவெகவினரை முதல்வர் விஜய் கண்டிக்க வேண்டும்" என சட்டப்பேரவையில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.



சட்டப்பேரவையில் இது குறித்து அவர் பேசுகையில், "பெண்கள் குறித்து யாரும் தவறாக பேசக் கூடாது; பேசினால் நடவடிக்கை எடுப்பேன்" என முதல்வர் விஜய் கூறிய கருத்தை வரவேற்கிறேன்; அவர் சொன்ன கருத்து எல்லோருக்கும் பொதுவான கருத்தாக இருக்க வேண்டும்.

பெண் தலைவர்கள், பெண்களைப் பற்றி சமூக வலைதளங்களில் மிக மிகக் கொச்சையாகவும் தவறாகவும் பதிவு செய்பவர்களில் தவெகவினரும் இருக்கிறார்கள்; அவர்களையும் முதல்வர் நிச்சயம் கண்டிக்க வேண்டும்" என்று பேசினார்.

இதற்குப் பதிலளித்து பேசிய அமைச்சர் நிர்மல் குமார், "ஒரு சிலர் எங்கள் கட்சி பெயரில் போலி ஐடிகள் உருவாக்கி பேசுகிறார்கள். திமுகவினர் தொடர்ந்து இது போல செய்து கொண்டு இருக்கிறார்கள். கேப்டன் விஜயகாந்திற்கு என்ன என்ன சங்கடம் ஏற்படுத்தினார்களோ, அதைத்தான் எங்களுக்கும் செய்கிறார்கள். தவெகவில் யார் தவறாகப் பேசினாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்று பதிலளித்தார்.

பின்னர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களிடத்தில் பேசுகையில், "இன்றைக்கு சட்டப்பேரவை முடிவதற்குள் காவல் துறைக்கு முதல்வர் நல்ல அறிவிப்புகளை வெளியிட வேண்டும்" இவ்வாறு அவர் பேசினார்.

# டெல்லியில் விடுதி கட்டிடம் இடிந்து விபத்து: உயிரிழப்பு எண்ணிக்கை 6 ஆக உயர்வு!



டெல்லி, செப்.8-
டெல்லி சத்திய நிகேதனில் 6 மாடி கட்டடம் இடிந்து விழுந்த கோர விபத்தில், உயிரிழந்த மாணவர்களின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது. தென்மேற்கு டெல்லியின் சத்யா நிகேதன் பகுதியில் (டெல்லி பல்கலைக்கழகத்தின் சவுத் காம்பஸ் அருகே) கல்லூரி மாணவர்கள் தங்கியிருந்த சுமார் 50 ஆண்டுகள் பழமையான 5 மாடி தனியார் விடுதி (Boys PG) கட்டிடம் ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:30 மணியளவில் திடீரென இடிந்து தரைமட்டமானது. கட்டிடத்தின் அடித்தளத்தில் (Basement) பழுதுபார்க்கும் பணிகள் மற்றும் தோண்டும் பணிகள் நடந்து கொண்டிருந்த போது, அங்கிருந்த தூண் (Pillar) நகர்ந்ததால் இந்த விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் சம்பவ இடத்துக்கு 12 தீயணைப்பு வாகனங்கள், பொக்லைன் இயந்திரங்கள் மற்றும் பேரிடர் மீட்புப் படையினர் விரைந்தனர். அதிகாரப்பூர்வ மீட்புக் குழுவினர் வருவதற்கு முன்பாகவே, உள்ளூர் மக்கள் கைகளாலேயே இடிபாடுகளை அகற்றி இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இடிபாடுகளில் சிக்கி இதுவரை உயிரிழந்தனர். மேலும் 10க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 3 பேர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இடிபாடுகளில் 50க்கும் மேற்பட்டவர்கள் சிக்கி இருக்கலாம் என அஞ்சுவதால் 15 மணி நேரத்திற்கு மேலாக மீட்புப்பணி நடைபெற்று வருகிறது.

# சுயமரியாதை திருமணங்களுக்கு அங்கீகாரம் பெற்றுத்தந்தது திமுக அரசு: திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்



சென்னை, செப்8-
நாட்டிலே உள்ள சமூகநோய்க்கும் மருந்து கண்டுபிடித்து சிகிச்சை அளிக்க வேண்டும் என திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் உரையாற்றியுள்ளார். திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் நடைபெற்ற கலைஞர் தொலைக்காட்சி செய்தி பிரிவுத் தலைவர் - எழுத்தாளர் திருமாவேலன் அவர்களது இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தி ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

இந்த இனிய மணவிழா திருக்குறள் நெறிப்படி நடந்தேறியிருக்கிறது. இதுதான் தமிழர்களின் நெறி! இதுதான் தமிழர்களின் பண்பாடு! இதைத்தான் திராவிட இயக்கம் நூறாண்டு காலமாக வலியுறுத்தி, தொடர்ந்து நிறைவேற்றிச் செயல்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இது போன்ற சுயமரியாதைத் திருமணங்கள் 1967-க்கு முன்பு நடைபெறும் என்று சொன்னால், அந்தத் திருமணங்கள் சட்டப்படி முறைப்படி செல்லுபடியாகும் என்ற அங்கீகாரத்தை அன்றைக்கு நாம் பெற்றிருக்கவில்லை. ஆனால், முதன்முதலில் ஒரு மாநிலக் கட்சி நம்முடைய தமிழ்நாட்டிலே ஆட்சிப் பொறுப்பேற்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி உதயமாகி, 1967-இல் அண்ணா முதன்முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுச் சட்டமன்றத்திற்குள்ளே சென்று, நம்முடைய தமிழ்நாட்டிற்காக முத்தான மூன்று திட்டங்களை நிறைவேற்றித் தந்தார்கள்.

ஒன்று, இருமொழிக் கொள்கை. இன்னொன்று, தமிழ்நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டக்கூடிய நிகழ்வு. அடுத்து, சுயமரியாதைத் திருமணங்கள் செல்லுபடியாவதற்கான சட்டம். அண்ணா அவர்களால் சட்டமன்றத்திலே சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்பூர்வமாகச் செல்லுபடியாகும் என்று நிறைவேற்றித் தந்திருக்கும் அந்தத் திருமணம்தான், இன்றைக்கு இங்கே நடந்தேறியிருக்கிறது. இது போன்ற திருமணங்களை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களும், இனமானப் பேராசிரியர் அவர்களும், இந்த இயக்கத்தின் முன்னோடிகளும் ஆயிரக்கணக்கான அளவில் நடத்தி வைத்திருக்கிறார்கள். தொடர்ந்து நாமும் அதை நடத்தி வருகிறோம்.

இல்வாழ்க்கையைப் பற்றி வள்ளுவர் சொல்கிறபோது, இல்வாழ்க்கை என்பது அன்பும் அறனும் கொண்டதாக அமைந்திட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். நம்முடைய திருமாவேலன் அவர்களுடைய தந்தை புலவர் படிக்கராமு அவர்கள், திருக்குறளைப் பரப்புகிற பணியிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அதற்காகவே அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய பணியைப் பாராட்டி, கடந்த திராவிட மாடல் ஆட்சியில் அவருக்குத் திருவள்ளுவர் விருது வழங்கிச் சிறப்பித்திருக்கிறோம். தலைமுறைகளைக் கடந்தும் இன்றும் இந்தப் பணியை நம்முடைய திருமாவேலன் அவர்களுடைய குடும்பத்தார் தொடர்ந்து செய்து கொண்டிருப்பது பாராட்டுக்குரியது, மகிழ்ச்சிக்குரியது, பெருமைக்குரியது, போற்றுதலுக்குரியது!

நம்முடைய திருமாவேலனிடம் எந்தப் பணியைக் கொடுத்தாலும், அதை நேர்த்தியாக, சிறப்பாக, அனைவரும் பாராட்டும் வகையில் நிறைவேற்றிக் காட்டும் ஆற்றலைப் பெற்றவர் அவர். இன்றைக்குக் கலைஞர் தொலைக்காட்சியில் செய்திப் பிரிவிலே தலைவராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாகத் தன்னுடைய கடமையை நிறைவேற்றி வருகிறார்.

இங்கே மணமகன், மணமகள் இரண்டு பேருமே மருத்துவர்கள். மருத்துவர்களாக இருக்கும் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, மனிதர்களின் நோய்க்கு இன்றைக்கு நீங்கள் எப்படி மருந்துகளைக் கண்டுபிடித்துச் சிகிச்சை வழங்கி வருகிறீர்களோ, அதுபோல இன்றைக்கு நாட்டிலே உள்ள 'சமூக நோய்க்கும்' மருந்து கண்டுபிடித்து, அதற்கும் நீங்கள் சிகிச்சை அளிக்க வேண்டும். அந்தப் பணியை நிறைவேற்றும் கடமையை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்பது என்னுடைய அன்பான வேண்டுகோள்.

அடுத்து, உங்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகள் ஆண் குழந்தையாக இருந்தாலும், பெண் குழந்தையாக இருந்தாலும், அந்தக் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள் என்ற வேண்டுகோளை வைத்து விடைபெறுகிறேன். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், "வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டராய்" மணமக்கள் வாழ்க! வாழ்க! வாழ்க! என வாழ்த்தி விடைபெறுகிறேன். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திமுகவுடன் கூட்டணி அமைக்க முயன்றதாக அடிக்கடி கூறுவதா?"

## தவெகவுக்கு அதிமுக கண்டனம்



சென்னை, செப்,8-
"திமுக, அதிமுகவோடு இணைந்து ஆட்சி அமைக்க முயன்றதாக அடிக்கடி சட்டப்பேரவையில் தவறான தகவலை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் திமுகவோடு என்றைக்கும் கூட்டணி அமைக்க விரும்பவில்லை. இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி எங்கேயும் பேசவில்லை." என அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சட்டப்பேரவையில் பேசிய அக்ரி கிருஷ்ணமூர்த்தி, "இங்கு பேசிய உறுப்பினர் ஒருவர், அதிமுக திமுவோடு கூட்டணி அமைக்க முயன்றதாகக் குறிப்பிட்டார். அதிமுக யாருடைய தயவிலேயும் தமிழகத்தில் கட்சியை நடத்தவில்லை. அதிமுகவை நிறுவியவர் எம்ஜிஆர். அவருடைய மறைவுக்குப் பின்னால் இந்த இயக்கத்தை எஃகு கோட்டையாக மாற்றியவர் ஜெயலலிதா.

இந்த இருபெரும் தலைவர்களின் மறைவுக்குப் பின்னால், இந்த இயக்கத்தையும் இந்த இயக்கத்தின் தொண்டர்களையும் எடப்பாடி பழனிசாமி காப்பாற்றி வருகிறார். அப்படிப்பட்ட இந்த இயக்கத்தை கலங்கப்படுத்தி யார் பேசினாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

தமிழகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அமைந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் 1.35 கோடி வாக்குகளுடன் 53 இடங்களைப் பெற்ற இயக்கம் அதிமுக. தனிப்பட்ட முறையில் 47 இடங்களை எடப்பாடி பழனிசாமி வென்றெடுத்திருக்கிறார்.

யாருடைய தயவிலும் நாங்கள் ஆட்சி அமைக்க விரும்பவில்லை. ஆனால், திமுக, அதிமுகவோடு இணைந்து ஆட்சி அமைக்க முயன்றதாக அடிக்கடி தவறான தகவலை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் எங்களை எதிர்க்கட்சியாக செயல்பட அனுமதித்திருக்கிறார்கள். நாங்கள் திமுகவோடு என்றைக்கும் கூட்டணி அமைக்க விரும்பவில்லை. இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி எங்கேயும் பேசவில்லை.

திமுக தீய சக்தி என்று சொன்னவர் எம்ஜிஆர், ஜெயலலிதா. அதே வழியில் அதிமுகவை தலைமை தாங்கி நடத்திக்கொண்டிருப்பவர் எடப்பாடி பழனிசாமி. எங்கள் இயக்கத்தைப் பற்றி யார் குறை சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். கண்டிக்கிறோம்." எனத் தெரிவித்தார்.

முன்னதாக, அமைச்சர் ஆதவ் அர்ஜுன் பேசும்போது "தவெக குதிரை பேரத்தில் ஈடுபடவில்லை. குதிரை பேரத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்பது மக்களுக்குத் தெரியும். திமுகவின் ஜெகத்ரட்சகனுக்குச் சொந்தமான அக்கார்டு ஹோட்டலில் குதிரை பேரத்தில் ஈடுபட்டது திமுகதான் என்பதை மக்களுக்கு நாங்கள் தெரியப்படுத்துகிறோம் என கூறி இருந்தார்," என்பது குறிப்பிடத்தக்கது.

# கோடி கோடியாய் கொண்டு வந்தனர்; ரகசியத்தை உடைத்து பேசிய எம்எல்ஏ சையத் பாருக் பாஷா!



திருவண்ணாமலை, செப்.8–

கோடி கோடியாய் பணத்தைக் கொண்டு வந்து, உங்களுக்கு என்ன துறை வேண்டும் என்று கேட்டதாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் எம்எல்ஏ சையத் பாருக் பாஷா பேசியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் திருவண்ணாமலை ஒருங்கிணைந்த மாவட்ட பொதுக்குழு கூட்டம் அணைக்கரை புறவழிச் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நேற்று (செப்.06) நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக சட்டமன்றக் கட்சித் தலைவரும், வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினருமான சையத் பாருக் பாஷா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது சையத் பாருக் பாஷா எம்எல்ஏ கூறுகையில், "தமிழக வெற்றிக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகிய கட்சிகளும் ஒவ்வொரு தொகுதிக்கும் மாவட்டச் செயலாளர்களை நியமித்துள்ளனர். ஏனென்றால் கட்சியின் வளர்ச்சிக்காகவும், வரக்கூடிய தேர்தல்களில் பணியாற்றி அதிக பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்பதற்காகவே. இப்போது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியிலும் இரண்டு தொகுதி ஒரு மாவட்டச் செயலாளர், மாவட்டத் தலைவரை நியமித்துள்ளோம். ஒரு தொகுதியில் மாவட்டத் தலைவர் பணியாற்றினால், மற்றொரு தொகுதியின் மாவட்டச் செயலாளர் பணியாற்றுவார்.

ஐடி விங்கில் மிகப்பெரிய வெற்றி உள்ளது. எனவே, இந்த ஐடி விங்க் உருவாக்க வேண்டும். நடப்பு சட்டமன்றத்தில் நான் எம்எல்ஏவாக இருக்கிறேன். பாபநாசம் எம்எல்ஏ ஷாஜகானும் உள்ளார். என்னையும், ஷாஜகானையும் தேடி வந்து கோடி கோடியாக எடுத்து வந்து அமைச்சர் பதவியைத் தருகிறேன்; நீங்கள் கையெழுத்துப் போடுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் கோடிக்கு சாய்ந்தவர்கள் இல்லை; கொள்கைக்கு சாய்ந்தவர்கள்.

எங்களுடைய இயக்கம் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்; கொள்கையோடு தான் இருப்போம் என்று கூறி அவர்களை விரட்டிவிட்டோம். அதில் இரண்டு முக்தர்கள் பணத்தோடு வந்தார்கள்; லெட்டரைப் பேடை தயார் செய்து வந்தார்கள்; இதில் கையெழுத்துப் போடுங்கள், எந்த துறை வேண்டும், உள்ளாட்சித்துறை வேண்டுமா?, போக்குவரத்துத்துறை வேண்டுமா? உங்களுக்கு தருகிறோம் ன்று கூறினார்கள். எந்த பதவியும் எங்களுக்கு வேண்டாம்; அல்லாஹ் எங்களுக்கு பதவிக் கொடுக்கக் கூடியவர். உங்களது பதவிக்காக எங்களுடைய கொள்கைகளை விட்டுக்கொடுக்க நாங்கள் தயாராக இல்லை என்று கூறிவிட்டோம். அதைத் தொடர்ந்து, அழைத்து பதவிக் கொடுத்தனர்.

இங்கு வந்திருக்கக் கூடிய அனைவரின் உழைப்பாலும் தான் நான் எம்எல்ஏவாக இருக்கிறேன். நான் அடிக்கடி சொல்வேன்; நான் எம்எல்ஏ கிடையாது; இந்திய யூனியன் முஸ்லீம் கட்சியின் கடைக்கோடி தொண்டனையும் எம்எல்ஏவாகவும், அமைச்சராகவும் நான் பார்க்கிறேன். நாங்களும் இனத்தால் திராவிடர்கள், மதத்தால் முஸ்லிம்கள், கொள்கையால் தமிழர்கள், தேசத்தால் இந்தியர்கள். எங்களுக்கு எல்லாம் உரிமையும் இந்த நாட்டில் இருக்கின்றது.

பாஜகவுடன் கூட்டணியில் உள்ள அதிமுகவை ஆட்சியில் அமர்த்துகிறோம் என்று மு.க.ஸ்டாலின் கூறினார். அந்த கொள்கை எங்களுக்கு ஒத்துவராது, நாங்கள் உங்களோடு ஒட்டும் இல்லை; உறவும் இல்லை. கூட்டணியில் இருக்க மாட்டோம் என்று கூறி விலகிவிட்டோம். உங்களது கொள்கைக்கு ஆதரவு கொடுக்கிறோம் என்று கூறி தவெக அரசுக்கு ஆதரவு அளித்துள்ளோம்.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் நீங்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இளைஞர்களை ஒருங்கிணைத்து செயல்பட்டால் வெற்றி நிச்சயம்; தவெக அரசு நமது கட்சிக்கு எப்படி அமைச்சர் பதவி வழங்கினார்களோ, அதேபோன்று உங்களுக்கும் உள்ளாட்சியில் பதவி வழங்குவார்கள்" என்றார்.

# இந்தியாவில் செல்வாக்கு மிகுந்த நபர்கள் மீதான ஊழல் வழக்கை விசாரிப்பது சிரமமாக உள்ளது

## சென்னை உயர்நீதிமன்றம் அதிருப்தி




சென்னை, செப்.8–

இந்தியாவில் செல்வாக்கு மிகுந்த நபர்கள் மீதான ஊழல் வழக்கை விசாரிப்பது சிரமமாக உள்ளது என்று சென்னை உயர்நீதிமன்றம் அதிருப்தி அடைந்துள்ளது. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு எதிரான டெண்டர் முறைகேடு வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் அதிருப்தி அடைந்துள்ளது. வழக்கு தொடர அனுமதி வழங்கக் கோரி தமிழக அரசு அனுப்பிய விளக்க கடிதம் மீது பரிசீலனை உள்ளது. அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தொடர ஒப்புதல் வழங்க தாமதம் ஏற்பட்டது ஏன் என்று ஐகோர்ட் கேள்வி எழுப்பியுள்ளது. வேலுமணி மீதான டெண்டர் முறைகேடு வழக்கு விசாரணையை செப்.16ம் தேதிக்கு ஒத்திவைத்தது ஐகோர்ட்.

# சி.விஜயபாஸ்கர் மீதான பண மோசடி புகாரில் விசாரணை தொடக்கம்: உயர் நீதிமன்றத்தில் காவல் துறை தகவல்



சென்னை, செப்.8–

சட்டப்பேரவைத் தேர்தலில் சீட் வாங்கித் தருவதாகக் கூறி வாங்கிய ரூ.4 கோடியைத் திருப்பி தராமல் ஏமாற்றியதாக முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கருக்கு எதிரான புகார் குறித்து ஆரம்பக் கட்ட விசாரணையை தொடங்கி உள்ளதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் காவல் துறை தெரிவித்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியைச் சேர்ந்த தனவிமல் என்பவர் தாக்கல் செய்த மனுவில், ‘சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் ஆலங்குடி தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்து இருந்தேன்.

இது தொடர்பாக, என்னை கைப்பேசியில் தொடர்பு கொண்ட அப்போதைய மாவட்டச் செயலாளர் சி.விஜயபாஸ்கர், தேர்வு செலவுகளை மேற்கொள்ளும் தகுதியை நிரூபிக்க ரூ.5 கோடி கொடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

வேட்பாளர் பட்டியல் அறிவிப்புக்கு பின்னர், அந்தப் பணத்தை திருப்பித் தந்துவிடுவதாக உறுதி அளித்திருந்தார். அதன்படி, ரூ.4.50 கோடியைத் திரட்டி விஜயபாஸ்கர் குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் சோத்துப்பாலை முருகேசன் என்பவரிடம் கொடுத்தேன்.

வேட்பாளர் பட்டியலில் எனது பெயர் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் செலவுகளுக்காக நான் கொடுத்தப் பணத்தைக் கேட்டபோது ரூ.50 லட்சம் மட்டுமே திருப்பிக் கொடுத்தனர். மீதித் தொகையை கொடுக்காமல் இழுத்தடித்தனர்.

மேலும், தற்போது விஜயபாஸ்கர் ஆளுங்கட்சியான தவெகவில் இணைந்துவிட்டார். இந்த நிலையில், எனது பணத்தை திருப்பிக் கேட்டபோது மிரட்டல் விடுக்கப்படுகிறது. இது குறித்து புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தேன்.

இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, எனது புகாரின் மீது வழக்குப் பதிவு செய்ய போலீஸாருக்கு உத்தரவிட வேண்டும்’ எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி வி.லட்சுமிநாராயணன் முன்பு திங்கள்கிழமைக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது காவல் துறை தரப்பில், ‘இது தொடர்பாக மனுதாரர் அளித்துள்ள புகார் மீது ஆரம்பக்கட்ட விசாரணை தொடங்கியுள்ளது. மனுதாரரை வரும் செப்டம்பர் 10-ம் தேதி விசாரணைக்கு ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, விசாரணையை செப்டம்பர் 15-ம் தேதிக்கு ஒத்திவைத்து, அன்றைய தினம் விசாரணையின் முன்னேற்றம் குறித்து காவல் துறை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டார்.

# தொல்காப்பியர் பூங்கா பராமரிப்பு பணிகளை தனியார் வசம் ஒப்படைக்க டெண்டர்!



சென்னை, செப்.8–

சென்னை அடையாறில் அமைந்துள்ள தொல்காப்பியர் பூங்கா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளின் பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை சார்பில் டெண்டர் கோரப்பட்டுள்ளது

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் தொல்காப்பியர் பூங்காவை பராமரித்து, மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் சுமார் ரூ.42 கோடி மதிப்பில் தொல்காப்பியர் பூங்காவை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், தொல்காப்பியர் பூங்கா மற்றும் அடையாறு உப்பங்கழிகள், முகத்துவாரம் உள்ளிட்ட மொத்தம் 358 ஏக்கர் பரப்பளவை பராமரிக்கும் பணிகளை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை முடிவு செய்துள்ளது.

இதற்காக இரண்டு ஆண்டுகளுக்கான பராமரிப்பு பணிகளுக்கு மொத்தம் ரூ.7.73 கோடி மதிப்பில் டெண்டர் கோரப்பட்டுள்ளது. டெண்டரில் தேர்வு செய்யப்படும் நிறுவனம், பூங்கா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் தினசரி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், பூங்காவின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான எண்ணிக்கையில் பாதுகாப்பு பணியாளர்களையும் நியமிக்க வேண்டும் என டெண்டர் நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெண்டர் மூலம் நிறுவனம் தேர்வு செய்யப்பட்ட பின்னர், அடையாறு தொல்காப்பியர் பூங்காவின் பராமரிப்பு பணிகள் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டியல் இன மக்கள் அரசியல் சக்தியாக வலிமை பெற்றால் முதல்வர் பதவி கிடைக்கும்

கோவை, செப்.8–

கோவை வேலந்தாவளம் பகுதியில் நேற்று நடைபெற்ற யோகா கல்லூரி நிகழ்வில், மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் ஜூவல் ஓரம், விசிக தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி, தமிழக அரசின் சமூக நீதித்துறை அமைச்சர் வன்னியரசு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.



அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் திருமாவளவன் எம்.பி. கூறியதாவது: இந்நிகழ்வில் பங்கேற்ற மத்திய அமைச்சரிடம் மலைவாழ் மக்களுக்கு அவர்களுடைய நலத்திட்டங்களை மேம்படுத்துதல், வீடு கட்டுதல், சாதிச் சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேசினேன்.

மதச்சார்பற்ற கொள்கையை கடைபிடிக்கும் போது, ஒரு அமைப்போ அல்லது அரசோ மதம் சார்ந்த பிரச்சாரம் செய்யக்கூடாது.

அது மக்களிடையே உள்ள ஒற்றுமையை சீர்குலைக்கும். பட்டியல் இன மக்களுக்கு முதல்வர் பதவி எப்போது கிடைக்கும் என்று கேட்கிறீர்கள். அவர்கள் இன்னும் ஒரு அரசியல் சக்தியாக வலிமை பெற வேண்டும். அவ்வாறு வலிமை பெற்றால் வாய்ப்பு கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழ்நாட்டில் 2 தொகுதிகளுக்கு மட்டும் இடைத்தேர்தல் அறிவித்தது இந்திய தேர்தல் ஆணையம்







டெல்லி, செப்.8–

தமிழ்நாட்டில் 2 தொகுதிகளுக்கு மட்டும் இடைத்தேர்தல் அறிவித்தது இந்திய தேர்தல் ஆணையம். அக்.6ம் தேதி மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெறும். மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் பதிவாகும் வாக்குகள் அக்.9ல் எண்ணப்படும். காலியாக உள்ள 7 தொகுதிகளில் 5 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. நாளை மறுநாள் வேட்புமனு தாக்கல் தொடக்கம்

# கோயில்களுக்கு அசாமிலிருந்து யானைகள் கொண்டு வருவது பற்றி ஒருவாரத்தில் முடிவெடுக்க தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு



சென்னை, செப்.8–

திருவண்ணாமலை உள்ளிட்ட 4 கோயில்களுக்கு அசாமிலிருந்து யானைகள் கொண்டு வருவது பற்றி ஒருவாரத்தில் முடிவெடுக்க தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு அளித்துள்ளது. கோயில் திருவிழாக்களில் யானைகளை பயன்படுத்துவது தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க கோரி வழக்கு தொடர்ந்தனர். மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு துர்கா என்ற யானையைக் கொண்டுவர தமிழக வனத்துறை ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது என்று தமிழக அரசு தகவல் தெரிவித்துள்ளது. வழக்கின் விசாரணையை செப்டம்பர் 16ம் தேதிக்கு தள்ளிவைத்து தலைமை நீதிபதி அமர்வு உத்தரவு பிறப்பித்துள்ளார்

# கிராமப்புறங்களில் கேஸ் சிலிண்டர் கட்டுப்பாடுகளை தளர்த்தி உத்தரவு




டெல்லி, செப்.8–

கிராமப்புறங்களில் கேஸ் சிலிண்டர் கட்டுப்பாடுகளை தளர்த்தி ஒன்றிய அரசு உத்தரவு அளித்துள்ளது. கேஸ் சிலிண்டர் பதிவு செய்வதற்கான இடைவெளி 45 நாட்களில் இருந்து 25 நாட்களாக குறைத்து ஒன்றிய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு துறை இணை அமைச்சர் சுரேஷ் கோபி அறிவித்துள்ளார்.

# ஏழைகளின் குடியிருப்பு உரிமைக்காக போராடிய இந்திய கம்யூ. கட்சியினரை கைது செய்வதா?’ : மு.வீரபாண்டியன் கண்டனம்



சென்னை, செப்.8–

“தமிழக அரசின் காவல் துறை மற்றும் இந்து அறநிலையத் துறையின் ஏழை, அடித்தட்டு மக்களுக்கு எதிரான நடவடிக்கை கடும் கண்டனத்துக்குரியது” என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “சென்னை, சைதாப்பேட்டை தொகுதி, மேட்டுப்பாளையம் அருகில் உள்ள ஆதிசென்ன கேசவ பெருமாள் கோயில் நிலத்தில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் வாடகை செலுத்தி வசித்து வருகிறார்கள். அவர்களில் 20 குடும்பங்களை சேர்ந்த ஏழை, எளிய மக்கள், அவர்களின் குடியிருப்புகளை காலி செய்ய வேண்டுமென மிரட்டப்படுகிறார்கள் என பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகிறார்கள்.

அவர்களின் வசிப்பிடத்தை வேறு சில தனியார் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கோயில் நிர்வாகத்தைச் சேர்ந்த சிலரும், அதிகாரிகளும், தனிநபர்களும் இணைந்து அவர்களை மிரட்டுகிறார்கள் என பாதிக்கப்பட்டோர் கூறுகின்றனர்.

தனது வீட்டுக்கு எதிரே ஏழை, எளிய மக்களின் குடியிருப்புகள் இருப்பதை விரும்பாத ஒரு நபர், அக்குடியிருப்புகளை அகற்ற பொது நல வழக்கை போட்டுள்ளார் என்றும், ஏழை மக்களின் குடியிருப்புகள் உள்ள இடத்தை அபகரிக்க அவர் திட்டமிட்டுள்ளார் என்றும் பாதிக்கப்பட்டுள்ளோர் கூறுகின்றனர்.

இந்த நிலையில் (செப்.7) இன்று காலை காவல் துறை அந்த குடியிருப்புப் பகுதியில் குவிக்கப்பட்டது. ஏழை, எளிய மக்களின் குடியிருப்பை பாதுகாக்க வேண்டும் எனக் கேட்டு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை பொதுமக்கள் நாடினர். நீதிமன்றத்தில் தனிநபருக்கு ஆதரவாக அறநிலையத் துறையில் உள்ள அதிகாரிகளில் சிலர் செயல்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், அரசுக்கு சொந்தமான கோயில் நிலத்தில் வாடகை செலுத்தி நீண்ட காலமாக வசிக்கும் ஏழை, எளிய மக்களின் குடியிருப்புகளை பாதுகாக்க வேண்டும், அம்மக்களின் வசிப்பிட உரிமைகளை பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு ஆதரவாக இந்து அறநிலையத் துறை நீதிமன்றத்தில் செயல்பட வேண்டும் என வலியுறுத்தி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பாதிக்கப்பட்ட மக்களுடன் இணைந்து இன்று போராடியது.

போராட்டம் நடத்திய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென் சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா, மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் மணிகண்டன், மாவட்ட துணைச் செயலாளர் அபிஷேக், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் ர.சவுமியா, துணைத் தலைவர் கமலக்கண்ணன் முதலானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசின் காவல் துறையும், இந்து அறநிலையத் துறையும், 20 குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் பொருட்களை எடுத்து சாலையில் வீசியுள்ளன. கைக்குழந்தைகளுடன் உள்ள ஏழை, எளிய மக்களையும் வீட்டுக்குள் புகுந்து வெளியேற்றிவிட்டு, வீடுகளுக்கு சீல் வைத்துள்ளன. தமிழக அரசின் காவல் துறை மற்றும் இந்து அறநிலையத் துறையின் இத்தகைய ஏழை, அடித்தட்டு மக்களுக்கு எதிரான நடவடிக்கை கடும் கண்டனத்துக்குரியது.

தமிழக அரசு இப்பிரச்சினையில் உடனடியாக தலையிட வேண்டும். கோயில் மனைகளில் குடியிருக்கும் அந்த 20 குடும்பங்களின் குடியிருப்பு உரிமைகளை பாதுகாத்திட முன்வர வேண்டும் எனவும், கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறது” என்று மு.வீரபாண்டியன் கூறியுள்ளார்.

# செல்வாக்கு மிக்கவர்கள் மீதான ஊழல் வழக்கை விசாரிப்பது சிரமம்...’

## சென்னை உயர் நீதிமன்றம் அதிருப்தி



சென்னை, செப்.8–

இந்தியாவில் செல்வாக்கு மிகுந்த நபர்கள் மீதான ஊழல் வழக்கை விசாரிப்பது சிரமமாக உள்ளது என சென்னை உயர் நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்தது.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு எதிரான டெண்டர் முறைகேடு வழக்கில், கந்தசாமி மற்றும் விஜயகார்த்திகேயன் ஆகிய இரு ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தொடர அனுமதி வழங்க தாமதம் செய்வது ஏன் என்பது குறித்து விளக்கம் அளிக்கும்படி மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் முன்பு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசுத் தரப்பில், ‘வழக்கு தொடர அனுமதி வழங்கக் கோரி தமிழக அரசு அனுப்பிய விளக்கம் கடிதம் ஜூலை 28-ம் தேதி கிடைக்கப் பெற்றது. அதன்மீது பரிசீலனை நடந்து வருகிறது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசுத் தரப்பில், ‘இது தொடர்பாக ஆகஸ்ட் 27-ம் தேதி நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது’ எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதி, ‘ஊழல் வழக்கில் அனுமதி வழங்க தாமதம் ஏற்படுத்துவது ஏன்? இந்தியர்கள் ஊழலுக்கு எதிராக எதிர்ப்பு தெரிவிப்பது இல்லை. இதுபோன்ற வழக்கில் இருந்துதான் முடிவுக்கு வரவேண்டி உள்ளது.

ஓர் ஊழல் வழக்கில் ஒப்புதல் பெறுவதற்கு நீதிமன்றம் எவ்வளவு வற்புறுத்த வேண்டியுள்ளது. இந்தியாவில் செல்வாக்கு மிகுந்த நபர்கள் மீதான ஊழல் வழக்கை விசாரிப்பது சிரமமாக உள்ளது. அனுமதி பெறுவதற்கே இவ்வளவு சிரமங்களை சந்திக்க வேண்டியுள்ள சூழலில், இதற்குபின் இந்த வழக்கில் என்ன நடக்கும் என கடவுளுக்குத்தான் தெரியும்’ என அதிருப்தி தெரிவித்தார்.

பின்னர், இந்த வழக்கில் ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தொடர ஒப்புதல் வழங்க தாமதம் ஏற்பட்டது ஏன் என்பது குறித்தும், ஒப்புதல் கோரிய கடிதத்தின் தற்போதைய நிலை என்ன என்பதையும் காணொலி வாயிலாக ஆஜராகி விளக்கம் அளிக்க மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சி துறை சார்பு செயலாளருக்கு உத்தரவிட்டு, விசாரணையை செப்டம்பர் 16-ம் தேதிக்கு தள்ளிவைத்தார்



# செக்கிழுத்த செம்மலுக்கு BHEL சங்கத்தினரின் வீரம் செறிந்த வணக்கம்! திருச்சியில் களைகட்டிய விழா

திருச்சி, செப்.08-

திருச்சி மாவட்டத்தில் BHEL (பெல்) ஊழியர்கள் மற்றும் திருச்சி பெல் இந்து சோழிய வேளாளர் சங்கத்தின் சார்பில், இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும், கப்பலோட்டிய தமிழனுமான ஐயா வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் 155-வது பிறந்தநாள் விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

**வ.உ.சி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை:**

திருச்சியில் (05.09.2026) நடைபெற்ற இந்நிகழ்வில், திருச்சி நீதிமன்றம் அருகில் அமைந்துள்ள தியாகி வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் முழு உருவச் சிலைக்கு, பெல் இந்து சோழிய வேளாளர் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாகச் சென்று மாலை அணிவித்து, மலர் தூவித் தங்களது வீரவணக்கத்தைச் செலுத்தினர்.

**புகழுரை & இனிப்புகள் வழங்கல்:**

நிகழ்ச்சியின் போது, தாய்நாட்டின் விடுதலைக்காகத் தனது அத்தனைச் செல்வங்களையும் இழந்து, சிறையில் செக்கிழுத்துத் தியாகம் செய்த ஐயா வ.உ.சி-யின் புகழையும், சுதேசிச் சிந்தனைகளையும் நிர்வாகிகள் எடுத்துரைத்தனர். தொடர்ந்து, விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் BHEL ஓய்வுபெற்ற அதிகாரி Dr G. பாலசுப்பிரமணியன், SVS நிர்வாகிகள், பொதுச்செயலாளர் திரு. முத்துக்குமார், பொருளாளர் திரு. பாலு, திரு. ஜெயபிரகாஷ், திரு. சண்முகசுந்தரம், திரு. ராஜா, திரு. வைரமுத்து ராமமூர்த்தி உட்படப் பல முக்கிய நிர்வாகிகளும், உறுப்பினர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# உள்ளாட்சி தேர்தலில் தவெக ஆட்சி உறுதி!" திண்டுக்கல் தெற்கு மாவட்டச் செயலாளர் நிர்மல்குமார் சூளுரை

சிறுமலை செப்.08-

திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை பழையூரில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மாபெரும் சாதனை விளக்க பொதுக்கூட்டமும், 500-க்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் கோலாகலமாக நடைபெற்றது.

***தலைமை உரை & அரசியல் சூளுரை:***

தமிழக வெற்றிக் கழக தலைவர் தளபதி விஜய் அவர்களின் நல்லாசியுடனும், கழக பொதுச்செயலாளர் ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் நடைபெற்ற இவ்விழாவிற்கு, திண்டுக்கல் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நிர்மல்குமார் தலைமை தாங்கினார். ஒன்றியச் செயலாளர் மருதமுத்து முன்னிலை வகித்தார்.



நிகழ்ச்சியில் தலைமையுரையாற்றிய மாவட்டச் செயலாளர் நிர்மல்குமார் பேசுகையில், "தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கைகளும் லட்சியங்களும் சாதாரண மக்களுக்கானவை. தளபதி விஜய் அவர்களின் எண்ணப்படி ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே நமது முதன்மை நோக்கம். கடந்த 100 நாட்களில் நமது கழகம் ஆற்றியுள்ள மக்கள் பணிகள் மற்றும் சாதனைகளை ஒவ்வொரு வீடொன்றும் கொண்டு சேர்க்க வேண்டும். வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற மக்கள் தயாராகிவிட்டனர்" என முழங்கினார்.

***500 பேருக்கு நலத்திட்ட உதவிகள்:***

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், ரூ.1 லட்சம் மதிப்பிலான பொருட்கள் வழங்கப்பட்டன. சிறுமலை, பழையூர், தோணிமலை உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த தூய்மை காவலர்கள் மற்றும் ஏழை பொதுமக்கள் 500-க்கும் மேற்பட்டோருக்கு அரிசி, மளிகைப் பொருட்கள், வேட்டி மற்றும் சேலைகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் அள்ளி வழங்கப்பட்டன.

இவ்விழாவிற்கான சிறப்பான ஏற்பாடுகளைச் சிறுமலை பகுதி நிர்வாகிகள் நாகராஜ், ராஜேஷ் கண்ணன் ஆகியோர் செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக்கழக நிர்வாகிகள், மகளிரணி, இளைஞரணி, தொண்டரணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# திண்டுக்கல் மேற்கு மாவட்ட தவெக அதிரடி! 100 நாள் சாதனைகளை விளக்கிப் பேசிய முக்கிய நிர்வாகிகள்

ஒட்டன்சத்திரம், செப்.08-

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றிய தமிழக வெற்றிக் கழகம் சார்பில், கழகத்தின் 100 நாள் சாதனைகளைப் பொதுமக்களுக்கு விளக்கும் மாபெரும் சிறப்புப் பொதுக்கூட்டமும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் கேதையுறும்பு ஊராட்சியில் நடைபெற்றது.

***முக்கிய நிர்வாகிகள் தலைமை & உரை:***

இம்மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சரும், திண்டுக்கல் மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான கே. விக்னேஷ் தலைமை தாங்கினார். தமிழக வெற்றிக் கழகத்தின் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே. கார்த்திக் ராஜன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் ஆர். அய்யனார், திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் எல். தர்மா, மாவட்டச் செயற்குழு உறுப்பினர் பழனி என். பாலன், ஒட்டன்சத்திரம் ஜே. கண்ணாயிரம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இக்கூட்டத்தில் கழகத்தின் 100 நாள் சாதனைகள், மக்கள் நலப் பணிகள் மற்றும் ஏழை எளிய மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து நிர்வாகிகள் விரிவாக எடுத்துரைத்தனர்.

***நலத்திட்ட உதவிகள் & அன்னதானம்:***

பொதுக்கூட்டத்தைத் தொடர்ந்து, ஏழை எளிய மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் அள்ளிக் வழங்கப்பட்டன. மேலும், கூட்டத்தில் பங்கேற்ற ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் கழகத் தொண்டர்கள் அனைவருக்கும் சிறப்பான முறையில் அன்னதானம் வழங்கப்பட்டது.

இப்பொதுக்கூட்டத்திற்கான சிறப்பான ஏற்பாடுகளை ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றியச் செயலாளர் டி. தினேஷ் செய்திருந்தார். நிகழ்ச்சியை ஒன்றியத் துணைச் செயலாளர் எம்.கே. அருண், ஒன்றியக் கழகப் பொருளாளர் எஸ்.ஆர். பேரரசு, சம்பத்குமார், செந்தூரப் பாண்டியன், மணிகண்டன் உள்ளிட்ட நிர்வாகிகள் ஒருங்கிணைத்து நடத்தினர். இதில் கழக நிர்வாகிகள், மகளிரணி, இளைஞரணி, தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



■ தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில், பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் விஷ்ணு மகாஜன், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஐஸ்வர்ய தேசாய், இ.ஆ.ப., உள்ளார்.

# குடகனாற்றைக் காக்கத் திரளும் மக்கள் சக்தி!" தடுப்புச் சுவரை அகற்றக் கோரி வேடசந்தூரில் மாபெரும் உண்ணாவிரதம்

திண்டுக்கல், செப்.08-

திண்டுக்கல் மாவட்டத்தின் வாழ்வாதாரமாக விளங்கும் குடகனாற்றின் இயற்கையான நீர் போக்கைத் தடுக்கும் ராஜ வாய்க்கால் சட்டவிரோதத் தடுப்புச் சுவரை உடனடியாக அகற்ற வலியுறுத்தி, வரும் செவ்வாய்க்கிழமை வேடசந்தூரில் நடைபெறவுள்ள மாபெரும் உண்ணா விரதப் போராட்டத்திற்குக் கிறிஸ்தவ வன்னியர் இளைஞர் சங்கம் தனது நிபந்தனையற்ற முழு ஆதரவைத் தெரிவித்துள்ளது.

***15,000 ஏக்கர் பாசனமும் 75 கிராமக் குடிநீரும்:***

இது தொடர்பாக மைலாப்பூர் வேளாங்கன்னி வெளியிட்டுள்ள அறிக்கையில், "மேற்கு தொடர்ச்சி மலையின் தாண்டிக்குடி பகுதியில் உருவாகி 108 கி.மீ பயணம் செய்யும் குடகனாறு, வழியில் 10 அணைகள் மற்றும் பல குளங்களை நிரப்பி அமராவதி ஆற்றில் கலக்கிறது. ஆத்தூர், பாறைப்பட்டி, வக்கம்பட்டி, அனுமந்தராயன் கோட்டை, தாடிக்கொம்பு, வேடசந்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளின் 15,000 ஏக்கர் விவசாயப் பாசனத்திற்கும்,



75 கிராமங்கள் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சியின் குடிநீர்த் தேவைக்கும் இவ்வாற்றின் நிலத்தடி நீரே ஆதாரமாக உள்ளது. ஆனால், கடந்த 10 ஆண்டுகளாக நமது நீர் உரிமை பறிக்கப்பட்டு ஆற்றின் ஓட்டம் முடங்கியுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

***சட்ட விதிமீறலும் தடுப்புச் சுவர் சர்ச்சையும்:***

கடந்த 2016-2017 ஆம் ஆண்டில் நபார்டு நிதி உதவியுடன், அரசு அனுமதித்த அளவை (உயரம் 1.84 அடி, அகலம் 0.7 அடி) மீறி, விதிமுறைகளுக்குப் புறம்பாக 150 அடி நீளம், 20 அடி அகலம் மற்றும் 10 அடி உயரத்தில் பிரம்மாண்டமாகச் சிமெண்ட் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இதனால் ஆற்றின் நீர் தெற்கு நோக்கித் திருப்பி விடப்பட்டு, குடகனாறு முற்றிலும் வறண்டு போகும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தின் அனைத்து அணைகளும் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் இருக்க, காமராஜர் நீர்த்தேக்கம் மட்டும் மாநகராட்சி கட்டுப்பாட்டில் இருப்பதும் இதற்கு முக்கியக் காரணம் எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

***செவ்வாய்க்கிழமை மாபெரும் உண்ணாவிரதம்:***

இச்சட்டவிரோதத் தடுப்புச் சுவரை அகற்றக் கோரி, குடகனாறு பாதுகாப்புச் சங்கத்தின் தலைவர் ராமசாமி தலைமையில் வேடசந்தூர் ஆத்துமேட்டுப் பகுதியில் வரும் செவ்வாய்க்கிழமை மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது. இப்போராட்டத்திற்கு வணிகர்கள் கடையடைப்பு மூலமும், வழக்கறிஞர்கள் நீதிமன்றப் புறக்கணிப்பு மூலமும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இச்சூழலில், கிறிஸ்தவ வன்னியர் இளைஞர் சங்கமும் இப்போராட்டத்திற்குச் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி, திரளாகப் பங்கேற்க முடிவு செய்துள்ளது.



# மக்கள் சேவையே மகேசன் சேவை!" லட்சிய ஜனநாயகக் கட்சி புதிய நிர்வாகிகளுக்குப் பணி நியமன ஆணை

திருப்பூர், செப்.08-

லட்சிய ஜனநாயகக் கட்சியின் நிறுவனத் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்களின் தலைமைக் கிணங்க, சென்னையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் திருப்பூர் வடக்கு மாவட்ட நிர்வாகிகளுக்குப் பணி நியமன ஆணை வழங்கும் விழா மிக விமரிசையாக நடைபெற்றது.

***பணி நியமன ஆணை வழங்கி கௌரவம்:***

மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் 'நெருப்புத் தமிழர்' நெல்லை ஜீவா முன்னிலையில், திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர் பிரபு தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதில் திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு அணிகளின் புதிய நிர்வாகிகளுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

***திரளாகப் பங்கேற்ற புதிய நிர்வாகிகள்:***

மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஆடிட்டர் பிரசாத், சுப்பிரமணி, மாவட்டப் பொருளாளர் நேச்சுரல் ஜெயராஜ், ஒன்றிய அணிச் செயலாளர் ஆதர்ஸ் சரவணன், ஒன்றியத் துணைச் செயலாளர்கள் டி.எஸ்.டி. கனகு, ஆர்மி கார்த்திக், நகரச் செயலாளர் சதீஷ்குமார், துணை நகரச் செயலாளர் சரவணகுமார், விவசாய அணிச் செயலாளர் தமிழ்ச்செல்வன், துணைச் செயலாளர்கள் ராஜாராம், தனமூர்த்தி, தகவல் தொழில்நுட்ப அணி (IT Wing) துரை வெங்கடேஷ், இளைஞரணித் துணைச் செயலாளர் எலக்ட்ரீசியன் குமார், வடக்கு மாவட்டக் கொள்கை பரப்புச் செயலாளர் மன்சூர் முகமது, மகளிரணித் துணைச் செயலாளர் வசந்தி மற்றும் வார்டு, கிளை, பகுதிச் செயலாளர்கள் அனைவரும் நேரில் கலந்து கொண்டு தங்களது நியமன ஆணைகளைப் பெற்றுக் கொண்டனர்.

***உறுதிமொழி ஏற்பு:***

நியமன ஆணையைப் பெற்றுக் கொண்ட அனைத்து நிர்வாகிகளும் லட்சிய ஜனநாயகக் கட்சியின் கோட்பா டுகளுக்கும் செயல்பா டுகளுக்கும் முழுமை யாகக் கட்டுப்பட்டு நடப்போம் என்றும், "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற உயரிய தாரக மந்திரத்தின்படி மக்களுக்காகத் தீவிரமாகப் பணியாற்றுவோம் என்றும் உறுதியேற்றுக் கொண்டனர்.

# தொழிலாளி உயிரிழப்புக்கு என்எல்சி நிர்வாக அலட்சியமே காரணம்" கடலூர் எம்.பி விஷ்ணுபிரசாத்

கடலூர், செப்.8-

நெய்வேலி என்எல்சியில் பணியின்போது தவறி விழுந்த தொழிலாளி சிகிச்சை பலனின்றி இறந்த நிலையில், அவரது உயிரிழப்புக்கு என்எல்சி நிர்வாகத்தின் அலட்சியமே காரணம் என கடலூர் மக்களவை உறுப்பினர் விஷ்ணுபிரசாத் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழ்நாட்டில் மின்சாரம் வழங்கக் கூடிய மிக முக்கியமான ஆதாரங்களில் ஒன்றாகவும், கடலூர் மக்களை தொகுதிக்கு உட்பட்டதாகவும் உள்ள என்எல்சி இந்தியா நிறுவனத்தின் நெய்வேலி அனல்மின் நிலையங்கள் விளங்குகின்றன. அங்கு செயல்பட்டு வரும் அனல்மின் நிலையம்-2 சுமார் 47 ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

25 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் மின் நிலையங்களில் பல்வேறு உபகரணங்கள் மற்றும் கட்டமைப்புகளில் தேய்மானம்




ஏற்படுவதற்கான வாய்ப்புகள அதிகம்.

எனவே, மின்நிலையத்தில் முக்கிய உபகரணங்கள், கட்டமைப்புகள் மற்றும் பாகங்கள் முறையாக ஆய்வு செய்யப்பட்டு, தேவையான இடங்களில் பழுதுபார்த்தல், பராமரித்தல் அல்லது மாற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

இதன் காரணமாகவே நெய்வேலியில் உள்ள அனல்மின் நிலையம்-1 செயல்பாட்டிலிருந்து நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அனல்மின்நிலையம்-2-க்கு Life Extension Programme (LEP) உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று நான் பலமுறை என்எல்சி நிர்வாகத்திடமும், நாடாளுமன்றத்திலும் வலியுறுத்தி கோரிக்கை வைத்துள்ளேன்.

ஆனால், இதுவரை நான் வைத்த கோரிக்கைகளுக்கும், நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகளுக்கும் உரிய மற்றும் நேரடியான பதில் கிடைக்கவில்லை. கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நேரடியாக பதிலளிக்காமல் பொதுவான பதில்களே வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, அனல்மின்நிலையம்-2 ன் Life Extension Programme குறித்து தெளிவான நடவடிக்கையோ அல்லது உரிய பதிலோ இதுவரை வழங்கப்படவில்லை.

இந்நிலையில், கடந்த ஆகஸ்ட் 24ம் தேதி காலை சுமார் 10 மணியளவில், முத்துகிருஷ்ணன் (37) என்ற தொழிலாளி சுமார் 15 மீட்டர் உயரமுள்ள மேடையில் ஏறி பணிபுரிந்தபோது, அந்த மேடை முறையான பராமரிப்பின்றி துருப்பிடித்து சேதமடைந்திருந்த காரணத்தால் எதிர்பாராதவிதமாக சாய்ந்து விபத்து ஏற்பட்டது. அதில் காயமடைந்த முத்துகிருஷ்ணன், புதுச்சேரி மகாத்மா காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், தற்போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தி வேதனைக்குரியது.

ஓர் உயிரிழப்புக்கு காரணமான என்எல்சி நிர்வாகத்தின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் குறித்து தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேலும் என்எல்சி நிறுவனத்தில் நடைபெற்றதாக கூறப்படும் பல கோடி ரூபாய் ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக ஆதாரங்களுடன் சிபிஐயிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் தொழிலாளர் உயிரிழப்புக்கு காரணமான விபத்து ஆகிய இரு விவகாரங்களிலும் மத்திய அரசு தலையிட்டு, தொடர்புடைய அனைத்து துறைகளையும் ஆய்வு செய்து முழுமையான விசாரணை நடத்த வேண்டும்.

உயிரிழந்த முத்துகிருஷ்ணன் குடும்பத்திற்கு உரிய நிவாரணம் மற்றும் நஷ்ட ஈடு வழங்குவதுடன், அவரது குடும்பத்தில் ஒருவருக்கு என்எல்சி நிர்வாகத்தில் நிரந்தரப் பணி வழங்கவும், குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் என்எல்சி நிர்வாகமும், மத்திய அரசும் உடனடியாக வழங்க வேண்டும்.

இனி யாரும் பாதுகாப்பு குறைபாட்டால் பலியாகாத வகையில், அனல்மின் நிலையம்-2ல் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். இதன் தீவிரத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசும் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று எம்.பி விஷ்ணு பிரசாத் கூறியுள்ளார்.

# இரு பெரும் தூண்களுக்குத் தமிழ் வணக்கம்!" வ.உ.சி மற்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்தநாள் விழா

ரிஷிவந்தியம், செப்.08-

ரிஷிவந்தியம் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், தியாகச் செம்மல் வ.உ.சிதம்பரம் பிள்ளை மற்றும் முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி டாக்டர் ஆ. இராதாகிருஷ்ணன் ஆகிய இருபெரும் தலைவர்களின் பிறந்தநாள் விழா ரிஷிவந்தியம் பேருந்து நிலையம் அருகில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

***தலைவர்கள் தலைமையில் கோலாகலத் தொடக்கம்:***

இவ்விழாவிற்கு ரிஷிவந்தியம் தமிழ்ச் சங்கத் தலைவர் ஆ. இராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். பாசார் கோ. இராமகிருஷ்ணன், முதுகலை ஆசிரியை க. விஜயகுமாரி, பட்டதாரி ஆசிரியை தங்கமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்ச் சங்கச் செயலாளர்



வ. இராசகோபால் அனைவரையும் அன்புடன் வரவேற்றார்.

***மாலை அணிவித்துச் சிறப்புரை:***

விழாவில், தமிழ்ச் சங்கச் சிறப்புத் தலைவர் த. இராமலிங்கம், சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் படத்திற்கும்; தமிழ்ச் சங்கக் காப்பாளர் ப. செல்வராஜ், தியாகச் செம்மல் வ.உ.சி படத்திற்கும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து, தியாகதுருகம் பாரதியார் தமிழ்ச் சங்கத் தலைவர் இரா. துரைமுருகன் கலந்து கொண்டு, இரு தலைவர்களின் இணையற்ற தொண்டுகளையும் தியாகங்களையும் நினைவுகூர்ந்து புகழாரம் சூட்டி சிறப்புரையாற்றினார்.

***திரளாகப் பங்கேற்ற சான்றோர்கள் & மாணவ - மாணவியர்கள்:***

இந்நிகழ்ச்சியில் சீனு. முரளி, வே. ஜெயந்தி, அ. தமிழரசி, ஏ. மாரியம்மாள், ஆசிரியர் முருகன், பள்ளி மாணவ - மாணவியர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழாவின் நிறைவாகத் தமிழ்ச் சங்கப் பொருளாளர் தொ. விஜயகுமார் நன்றியுரையாற்றினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000